செ.வெ.எண்: 20/ ஜுலை / 2021 நாள்:05.07.2021

# செய்திக் குறிப்பு

-------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 145 வக்ஃபு நிறுவனங்களில் பணிபுரியும் உலமாக்களுக்கு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு புதிய இரு சக்கர வாகனங்கள் வாங்க ஒரு நபருக்கு ஒரு வாகனத்திற்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தையாயிரம் மட்டும்) (அல்லது) வாகனத்தின் விலையில் 50 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகையினை வழங்க உள்ளது.

**1.மானியம்:**

இரு சக்கர வாகனத்தின் மொத்த விலையில் 50% அல்லது ரூ.25,000/- இதில் எது குறைவோ அத்தொகையினை மானியமாக வழங்கப்படும். இருசக்கர வாகனம் புதிய தொழிற்நுட்பத்துடன் கூடிய Gearless/ Auto gear கூடிய எஞ்சின் 125 CC சக்திக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அரசின் மானிய விலைக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் பட்சத்தில் இத்தொகையினை பயனாளியே செலுத்த வேண்டும்.

**3.வாகன தேர்வு:**

பயனாளி வாங்கும் வாகனமானது வாகன விதிமுறைச் சட்டம் 1988-ன் படி பதிவு செய்திருத்தல் வேண்டும். வாகனம் 01.01.2020க்கு பிறகு தயார் செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும். இவ்வாகனங்கள் 5 ஆண்டுகள் வரை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரின் அனுமதியின்றி உரிமம் மாற்றம் செய்வதோ, வேறு ஒருவருக்கு மாற்றவோ, விற்கவோ கூடாது.

**4.இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான தகுதிகள்:**

அ) வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃபு நிறுவனங்களில் மனுதாரர் விண்ணப்பிக்கும் நாளில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.

ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இ) வயது 18 லிருந்து 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஈ) விண்ணப்பிக்கும்போது இரு சக்கர வாகனம் ஓட்டும் கற்றுணர்வுக்கான (LLR) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

உ) கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு (தேர்ச்சி/ தோல்வி)

ஊ) பதிவு செய்யப்பட்ட வக்ஃபு நிறுவனத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மானிய உதவி கோரி விண்ணப்பம் செய்தால் 1.பேஷ் இமாம் 2.அரபி ஆசிரியர்கள் 3.மோதினார்கள் 4.முஜாவர் என்ற முன்னுரிமை அடிப்படையில் ஒருவருக்கு மட்டும் மானிய தொகை வழங்கப்படும்.

சம்மந்தபட்ட முத்தவல்லியிடம் எத்தனை ஆண்டுகள் வக்ஃபில் பணிபுரிகிறார் என்பதற்கான சான்று பெற்று மாவட்ட வக்ஃபு கண்காணிப்பாளர் மேலொப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், வாகனம் வாங்குவதற்கான விலைப்பட்டியல்/விலைப்புள்ளி ஆகியவற்றுடன் மாவட்ட ஆட்சியர் வளாக இரண்டாம் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் நேரில் வந்து விண்ணப்பத்தினை பெற்றுக் கொண்டு 15 நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய உலமா பணியாளர்கள் விண்ணப்பித்து பயன் அடையும்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**